<u>O.S.No.131/2022</u> தேதி – 11.06.2025

<u>வா.சா.2. – கனிக்குரு</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

நான் வாதி செல்லத்துரை என்பவருக்கு அண்ணன் மருமகன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சம்மன் எதுவும் எனக்கு வரவில்லை. பத்திரம் எழுதிய பத்திர எழுத்தர் செல்லத்துரைக்கு வேண்டியவர் என்றால் சரிதான். அடமான பத்திரம் யார் வாங்கி கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காளிதாஸ் என்பவர் பத்திரம் எழுதும் அலுவலகத்தில் வைத்து டைப் செய்தார் என்றால் சரிதான். அதில் உள்ள சரத்துக்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் பாலசுப்பிரமணியன், காளிராஜ் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்தார். சார்பதிவாளர் அலுவலத்தில் உள்ள பதிவேட்டில் பாலசுப்பிரமணியன் முதலில் கையெழுத்து போட்டார். நான் பின்னர் கையெழுத்து பேட்டேன். பாலசுப்பிரமணியன் ரூபாய் வாங்கியது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ரூபாய் வாங்கும்போது நானும் உடன் இருந்தேன். எத்தனை மணிக்கு எங்கு வைத்து ரூபாய் வாங்கினார் என்றால் செல்லத்துரை வீட்டில் வைத்து காலை 10.00 மணிக்கு வாங்கினேன். நான் ரூபாய் வாங்குவதாக, சொன்ன நேரத்தில் நான் உடன் இருக்கவில்லை என்றாலும், வாதி செல்லத்துரை சின்னமாமனார் என்பதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த பத்திரத்தை பத்திரப்பதிவிற்காக மதியம் தாக்கல் செய்தோம். பாலசுப்பிரமணியன் என்பவர் படிப்பறிவு இல்லாதவர் என்பதால் அவரிடம் ரூபாய் 5 லட்சமே மட்டுமே கொடுத்துவிட்டு ரூபாய் 10 லட்சம் என்று எழுதிவாங்கிவிட்டோம் என்று சொன்னால் சரியல்ல. அடமான சொத்து என்பது பாலசுப்பிரமணியத்திற்கு பூர்விக சொத்து என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் எனது சின்னமாமனாருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.